# நவம்பரில் 8.58 லட்சம் பேர் மெட்ரோ ரயில்களில் பயணம்

**சென்னை**

மெட்ரோ ரயில்களில் கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 8 லட்சத்து 58 ஆயிரத்து 546 பேர் பயணம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சென்னையில் மெட்ரோ ரயில் சேவை, கடந்த செப்டம்பர் மாதம் 7-ம் தேதி மீண்டும் தொடங்கப்பட்டது. அதன்படி, கடந்த செப்டம்பர் மாதத்தில் 3 லட்சத்து 60 ஆயிரத்து 193 பேரும், அக்டோபரில் 7 லட்சத்து 3 ஆயிரத்து 22 பேரும், நவம்பரில் 8 லட்சத்து 58 ஆயிரத்து 546 பேரும் பயணம் செய்துள்ளனர். குறிப்பாக, கடந்த 23-ம் தேதி மட்டும் 38 ஆயிரத்து 615 பேர் பயணம் செய்துள்ளனர். கரோனா ஊரடங்கு தளர்வுக்கு பிறகு நவம்பர் மாதம் இறுதி வரையில் மொத்தம் 19 லட்சத்து 21 ஆயிரத்து 962 பேர் பயணம் செய்துள்ளனர்.

க்யூ ஆர் குறியீடு பயணச்சீட்டு முறையில் 21 ஆயிரத்து 579 பேரும், பயண அட்டை பயணச்சீட்டு முறையை பயன்படுத்தி 4 லட்சத்து 72 ஆயிரத்து 27 பேரும் பயணம் செய்துள்ளனர்.